# இறைவனின் தாயே

இறைவனின் தாயே
இரக்கத்தின் அரசியே
அம்மா உம்மை வாழ்த்துகிறோம்
அம்மா உம்மை வணங்குகிறோம்

1
அருள்நிறை மரியே மாதாவே
இயேசுவைச் சுமந்த தாய்மரியே
இதயத்தில் வா இதயத்தில் வா
இயேசுவை சுமந்து நீ வா (அம்மா..)

2
சிலுவையின் அடியில் நின்றவளே
இயேசுவைப் பலியாய்க் கொடுத்தவளே
இதயத்தில் வா இதயத்தில் வா
இயேசுவை சுமந்து நீ வா (அம்மா..)

3
பிள்ளைகள் குரலைக் கேட்பவளே
பாசமாய் என்றும் பார்ப்பவளே
இதயத்தில் வா இதயத்தில் வா
இயேசுவை சுமந்து நீ வா (அம்மா..)

4
அன்பாய் எம்மை அணைப்பவளே
ஆறுதல் எமக்குத் தருபவளே
இதயத்தில் வா இதயத்தில் வா
இயேசுவை சுமந்து நீ வா (அம்மா..)